**மதுராவல பிரதேச சபை**
**களுத்துறை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 31 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 25 ஆந் திகதியும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 யூலை 29 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மதுராவல பிரதேச சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மேல் மாகாண சபையினால் 2013 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்ட கெப் வண்டிக்கு மீளாய்வாண்டின் போது மூலதனச் செலவினத்தின் கீழ் செய்யப்பட்ட செலவினங்கள் வருமானத்தின் பங்களிப்பாகக் கருதி மூலதனமாக்கலில் பதியப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 1,059,409 இனால் மோட்டார் வாகனத்திலும் மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமானப் பங்களிப்புக் கணக்கிலும் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டின் அறிக்கையின் 2.2.1(இ) ஆம் பந்தியின் விடயங்களைச் சிராக்குவதற்காக திரண்ட நிதியக் கணக்கில் ரூபா 389,863 தொகை வரவு வைக்கப்பட வேண்டிய போதிலும், நாட்குறிப்பு 29 இன் மூலம் மீளாய்வாண்டின் செலவினக் கணக்கில் வரவு வைக்கப்பட்டமையின் காரணமாக ஆண்டின் மிகை அந்த அளவால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(இ) முன்னைய ஆண்டின் முத்திரைக் கட்டணம் குறைத்து பற்றுச்சீட்டிடப்பட்டமையை சீராக்குவதற்காக நிலுவையாக இருந்த முத்திரைக் கட்டணம் கணக்கு வரவு வைக்கப்பட்டு திரண்ட நிதியம் செலவு வைக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறின்றி ஏனைய வருமானக் கணக்கு செலவு வைக்கப்பட்டமையின் காரணமாக மீளாய்வாண்டின் வருமானம் ரூபா 1,562,282 இனால் அதிகரித்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) முன்னைய ஆண்டில் ரூபா 24,850 தொகை அதிகரித்து வேலைக் கடன்கொடுத்தோர் நிதிஏற்பாடு செய்யப்பட்டமையை சீராக்குவதற்காக வேலைக் கடன்கொடுத்தோர் கணக்கில் வரவு வைத்து திரண்ட நிதியக் கணக்கில் செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யாது மூலதனச் சொத்துக்களை பழுதுபார்த்தல் மற்றும்

பராமரிப்புக் கணக்கில் செலவு வைக்கப்பட்டமையின் காரணமாக மீளாய்வாண்டின் செலவினம் ரூபா 24,850 இனால் குறைத்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) முன்னைய ஆண்டில் கடன்கொடுத்தோர் ரூபா 167,093 தொகை அதிகரித்து நிதிஏற்பாடு செய்யப்பட்டமையை சீராக்குவதற்காக பொதுக் கடன்கொடுத்தோர் கணக்கில் வரவு வைத்து திரண்ட நிதியக் கணக்கில் செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறாறின்றி செலவினக் கணக்கில் செலவு வைக்கப்பட்டமையின் காரணமாக மீளாய்வாண்டின் செலவினம் ரூபா 167,093 இனால் குறைத்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) முன்னைய ஆண்டில் ''தொறின் தொறட்ட கமின் கமிட்ட''(வீட்டிற்கு வீடு கிராமத்திற்கு கிராமம்) நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் உடபெரெட்டுவ வீதியை நிர்மாணிக்கும் போது ரூபா 14,034 தொகை அதிகரித்து கடன்பட்டோர் நிதிஏற்பாடு செய்யப்பட்டமையை சீராக்குவதற்காக திரண்ட நிதியக் கணக்கில் வரவு வைத்து வேலைக் கடன்கொடுத்தோர் கணக்கில் செலவு வைக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறின்றி மூலதன மானியக் கணக்கு வரவு வைக்கப்பட்டமையின் காரணமாக நடப்பாண்டில் மூலதன மானியம் அந்த அளவால் குறைத்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(எ) 2008, 2012 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளுக்குரியதாக மீளாய்வாண்டின் போது கிடைக்கப் பெற்ற ரூபா 246,134 கூட்டுத்தொகையான மூலதன மானியம் வேலைக் கடன்பட்டோர் கணக்கில் செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறின்றி மூலதன மானியக் கணக்கில் செலவு வைக்கப்பட்டமையின் காரணமாக மீளாய்வாண்டின் மூலதன மானியம் மற்றும் வேலைக் கடன்பட்டோர் இறுதி மீதி அப்பெறுமானத்தால் அதிகரித்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஏ) நடப்பாண்டில் பின்தங்கிய கிராம நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பட்டவல வீதியை (யொவுன் கிராமத்திற்குச் செல்லும் வீதி) நிர்மாணிப்பதற்காக ரூபா 996,338 கடன்கொடுத்தோர் நிதிஏற்பாடு செய்யப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக மீளாய்வாண்டில் கடன்பட்டோர் மற்றும் மூலதன மானியம் என்பன அதே அளவில் குறைத்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஐ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட 2 சுவர் மின் விசிறிகளின் பெறுமதியான ரூபா 17,400 தொகை மூலதனமாக்கப்படாமல் அப்பெறுமதியில் நிலையான சொத்துக்கள் மற்றும் மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமானப் பங்களிப்புக் கணக்கு என்பன குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஒ) ஆதனவரி முற்பெறுவனவுகள் ரூபா 18,468 ஆக இருந்த போதிலும், நிதிக்கூற்றுக்களில் ரூபா 6,039 ஆகக் காண்பிக்கப்பட்டமையின் காரணமாக முற்பெறுவனவுகள் ரூபா 12,429 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.3.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்வற்றுடன் இணங்காமைகள்

(அ) இலங்கைக் குடியரசின் நிதிப்பிரமாணம் 371(அ) இன் பிரகாரம் எந்தவொரு செயற்பாட்டிற்காகவும் வழங்கப்படுகின்ற முற்பணம் உரிய பணி நிறைவு பெற்றதும் உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டிய போதிலும், 2012 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளுக்குரிய ரூபா 36,817 தொகையான முற்பணம் 2016 யூன் 10 ஆந் திகதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2002 நவம்பர் 28 ஆந் திகதிய IAI/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் பிரகாரம் கணனி, துணைப்பாகங்கள் தொடர்பாக நிலையான சொத்துப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 84,825 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 1,804,723 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 நிலுவை வருமானம்

மீளாய்வாண்டின் இறுதியில் கூட்டுமொத்தமாக ரூபா 730,998 தொகையான நிலுவை வருமானம் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 158 மற்றும் 159 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகளின் பிரகாரம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 வியாபார வரி

(அ) மெய்மையாய்வு செய்யப்பட்ட 22 வியாபாரங்களுக்குரிய மதிப்பீட்டு அறிக்கையின் தகவல்கள் வியாபார வரிக் கணக்கில் பதியப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2015 ஆம் ஆண்டில் 68 வியாபார வரி உரிமையாளர்கள் பணம் செலுத்திய போதிலும் அதில் 13 வரியிறுப்பாளர்களின் மதிப்பீட்டு அறிக்கை காணப்பட்டது. மிகுதி 55 வரியிறுப்பாளர்கள் தொடர்பாக மெய்மையாய்வு அறிக்கை காணப்படவில்லை.

#### 2.2.3 கைத்தொழில் வரி

(அ) மெய்மையாய்வு செய்யப்பட்ட 8 வரியிறுப்பாளர்களுக்குரிய மதிப்பீட்டு அறிக்கை தகவல்கள் கைத்தொழில் வரிப் பதிவேட்டில் பதியப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கைத்தொழில் வரிப் பதிவேட்டில் குறிப்பிடப்பட்ட பணம் செலுத்திய 38 வரியிறுப்பாளர்களில் 28 வரியிறுப்பாளர்கள் தொடர்பான மதிப்பீட்டு அறிக்கை காணப்படவில்லை.

#### 2.2.4 ஆதனவரி

2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் மதுராவல தலைமை அலுவலகத்திற்குரிய ஆதனவரி ரூபா 473,303 தொகையும், வறகாகொட உப அலுவலகத்திற்குரிய ரூபா 232,411 தொகையும் மற்றும் ரூபா 2,000 இற்கு மேற்பட்ட 35 ஆதனங்களிலிருந்து ரூபா 156,806 தொகையும் அறவிட வேண்டியிருந்த போதிலும், 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

#### 2.2.5 அறிவித்தல் பதாதைக் கட்டணம்

(அ) சபை அதிகாரப் பிரதேசத்தில் பொருத்தப்பட்டுள்ள அறிவித்தல் பதாதைகளுக்காக 2015 ஆம் ஆண்டிற்காக அறவிட வேண்டிய ரூபா 186,585 தொகையான அறிவித்தல்

பதாதைக் கட்டணம் 2015 ஒக்தோபர் 15 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அறவிட வேண்டிய அறிவித்தல் பதாதைக் கட்டணம் குறித்த காலப் பகுதியில் செலுத்தாமையின் காரணமாக அக்கட்டணத்தை அறவிடல் தொடர்பான அறிவித்தல் வழங்கல் 2012 ஆம் ஆண்டின் பின்னர் இடம்பெற்றிருக்கவில்லை.

### 2.2.6 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினர்களிடமிருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 10,023,814 தொகையொன்று பின்வருமாறு கிடைக்கவேண்டியிருந்தது.

| | ரூபா |
|---|---|
| நீதிமன்றத் தண்டப்பணம் | 4,323,495 |
| முத்திரைக் கட்டணம் | 5,700,319 |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

(அ) மரணமடைந்த, பணியிடமாற்றம் பெற்றுச் சென்ற மற்றும் சேவையை விட்டுச் சென்ற 05 உத்தியோகத்தர்களிடமிருந்து 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் இடர்கடன், விஷேட முற்பணம் மற்றும் விழா முற்பணம் என்பவற்றிற்காக சபைக்கு ரூபா 241,403 தொகை அறவிடவேண்டியிருந்தது.

(ஆ) 2014 இன் பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் நூலகங்களிலிருந்து வெளியே கையளிக்கப்பட்டு மீளக் கையளிக்கப்படாத 167 புத்தகங்களை நூலகத்திற்கு மீளப் பெற்றுக் கொள்வதற்கு 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 132(ஒ) பிரிவின் பிரகாரம் ஏதாவது சமய, புண்ணிய கருமங்கள், கலாசார, சுகாதார, களியாட்ட அல்லது கல்விரீதியான செயற்பாடுகள் தொடர்பாக ஒருவருடத்திற்கு கூட்டுமொத்தமாக ரூபா 1,000 இனை விட மேற்படுமாயின் அமைச்சரின் முன் அங்கீகாரம் பெறப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு அங்கீகாரம் பெறப்படாமல் மீளாய்வாண்டின் போது சபையினால் ரூபா 56,700 செலவிடப்பட்டிருந்தது.

## 4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிர்வாகம்
(இ) ஊழியர் கடன் கட்டுப்பாடு
(ஈ) பாதீட்டுக் கட்டுப்பாடு